அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12.11 -

ஆடி - ஆவணி
புதுமலர்: 16
இதழ்: 04

# அனல்

01.07.2019

ஆசிரியர்: போதகர் வே.மகாராஜா



நாம் கவனித்துப் பார்க்க வேண்டிய

# ஒரே நபர்

# இயேசு கிறிஸ்துவே!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

அனல்

# பொருளடக்கம்

01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. வாலிபர் வளாகம்
04. பெண்கள் பக்கம்
05. சிறுவர் வட்டம்
06. வினா விடை - 94
07. நற்செய்திப்பகுதி
08. அருட்பணியாளர் சரிதை
09. குறுக்கெழுத்துப்போட்டி - 92
10. அனலின் ஆன்மீக விருந்து
11. கர்த்தர் பார்க்கின்றார்



# ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.

## மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.



T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக – எரேமியா 49:11 –

# அனலின் குரல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

மகிமைப்பிரதாபன், மாறிடா பேரொளி, இருளை வெளிச்சமாக்குகின்ற கர்த்தர், நீதியின் சூரியன், உன் வாழ்வின் இருண்ட நிலையில் இருந்து உன் வாழ்வை பிரகாசிக்கச் செய்ய ஆவலாய் எதிர்பார்த்திருக்கின்றார். ஆண்டவராகி கிறிஸ்து இயேசுவை உன் வாழ்வுக்குள் செயலாற்ற விட்டுவிடு. அதன் முடிவு மகிமையாகவே இருக்கும்.

**முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர் - 1கொரிந் தியர் 15:47** கிறிஸ்து உனக்குள் வரும்போது ஒரு பூரண மாற்றத்தை உன் வாழ்வில் உணரமுடியும்.

மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே.

பாவ சுபாவம், பழைய வாழ்வு நீங்கப்பெற கிறிஸ்துவின் முற்றுமான புதிதாக்குதலுக்குள் வாருங்கள். கிறிஸ்து வானத்துக்குரியவர். நித்திய நித்தியமான வாழ்வுக்குரிய சகல தகுதிப்படுத்தலும் கிறிஸ்துவுக்குள் உண்டு. அவருடைய வருகைக்காக உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

– ஆசிரியர் –




❐ வை. விமலதாஸ்

ஒரு தோட்டத்தில் புதிதாக வாழைக்கன்று ஒன்று நடப்பட்டது.

ஏற்கனவே அது நடப்பட்ட இடத்திற்கு அருகில் ஒரு தென்னங்கன்றும் இருந்தது. இப்போது புதிதாக வந்த வாழைக்கன்று தென்னங்கன்றிடம் கேட்டது "நீ இங்கே எத்தனை வருடமாக இருக்கிறாய்?"

தென்னங்கன்று சொன்னது "ஒரு வருடம்"

"ஒரு வருடம் என்று சொல்கிறாய், ஆனால் என்னைவிட சற்றுத்தான் உயரமாக இருக்கிறாய்? ஏதாவது நோய் இருக்கிறதா?" என்று கேட்டுவிட்டு ஏதோ பெரிய நகைச்சுவையைக் கூறிய நினைப்பில் கலகலவென சிரித்தது. தென்னங்கன்றோ அதைக் காதில் வாங்காதது போன்று புன்னகைத்தது.

ஒவ்வொரு நாளிலும் வாழைக்கன்றின் வளர்ச்சி தென்னங்கன்றைவிட பெரிதாக இருந்தது. இரண்டு மாதத்திற்குள் தென்னங்கன்றைவிட வாழைக்கன்று உயரமாக வளர்ந்துவிட்டது. இப்போது வாழைக்கன்றின் கேலியும், கிண்டலும் அதிகமானது. தென்னங்கன்றோ எப்போதும் போன்று சலனமின்றி புன்னகைத்துக் கொண்டிருந்தது.

வாழைக்கன்று நடப்பட்டு ஒரு வருடம் ஆவதற்குள் தென்னங்கன்றைவிட இரண்டு மடங்கு உயரமாக வளர்ந்துவிட்டது.

இப்போது தினமும் தென்னங்கன்றைப் பார்த்து கேலி செய்து சிரிப்பது மட்டும் வாழைக்கன்றில் குறையவேயில்லை.

"ஆண்டவருக்கு உன்னைமட்டும் பிடிக்காதோ? ஒரு அளவுக்கு மேல உன்னை வளரவிடாமல் தட்டி வைத்திருக்கிறாரே" "நீ இருக்கிற மண்ணில் தான் நானும் இருக்கிறேன், உனக்கு கிடைக்கிற தண்ணீர் தான் எனக்கும் கிடைக்கிறது. ஆனால் பார் நான் மட்டும் எவ்வளவு வேகமாக வளர்ந்துவிட்டேன், உனக்குரிய அளவு இவ்வளவு தான்" என்று வார்த்தைகளாலேயே தென்னங்கன்றை குத்திக் காயப்படுத்தியது வாழைக் கன்று. தென்னங்கன்றிடம் புன்னகையைத் தவிர வேறெந்த பதிலும் வரவில்லை.

இன்னும் சிறிது காலம் சென்றது, இப்போது வாழை மரமாகி அதிலிருந்து அழகான குலை வெளிப்பட்டது. அது பூவும், காய்களுமாக மிகவும் அழகாக மாறியது. அதனுடைய பெருமை இன்னும் அதிகமானது. இரவும், பகலும் தென்னங்கன்றைக் கேலி செய்து சிரித்தபடியே பொழுதைக் கழித்தது.

நல்ல உயரம், பிளவுபடாத அழகிய இலைகள், கம்பீரமான குலை. வாழை மரத்தின் பெருமைக்கு அளவே இல்லாமல் போய்விட்டது. இப்போது அதன் காய்கள் முற்றின. ஒரு நாள் ஒரு மனிதன் அந்த தோட்டத்திற்கு வந்தான். வாழை மரத்தைச் சந்தோஷமாய் சுற்றி வந்தான். வாழைக்காய்களை தட்டிப்பார்த்தான். ஆனால் தென்னை மரத்தை அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

இதைவிட வேறென்ன பெருமை வேண்டும்? வாழை மரத்தின் பெருமை அடங்குவதற்குள், திடீரென ஒரு புதிய மனிதன் கத்தியுடன் வந்தான். முதலாவது மனிதன் பிடித்துக் கொள்ள அதன் குலையை வெட்டி எடுத்தான். வாழை மரம் கதறியது. அதன் பெருமையெல்லாம் காணாமல் போனது. மரண பயம் வந்துவிட்டது. அது பயந்தபடியே அந்தக் காரியமும் நடந்தது. ஆம் வாழை மரம் வெட்டிச் சாய்க்கப்பட்டது.

ஒரு வருட காலத்திற்குள் அதன் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அது துண்டு துண்டாக வெட்டப்பட்டு தோலுரிக்கப்பட்டது. ஆனால் தென்னை மரமோ இன்னும் பழையபடியே புன்னகைத்துக் கொண்டிருந்தது. அதன் புன்னகைக்கு என்ன அர்த்தம் என்பது இப்போது தான் வாழை மரத்திற்குப் புரிந்தது.

ஆம் நண்பர்களே, எம்முடைய வாழ்க்கைப் பயணத்திலும் எவ்வளவு படிகளைத் தாண்டிச் செல்கின்றோம். அதில் எத்தனைவிதமான சூழ்நிலைகள், மனிதர்கள், சந்தர்ப்பங்கள் என முகம் கொடுக்கிறோம். சிலவேளை இப்போது நாம் இருக்கும் சூழ்நிலையை காரணம் காட்டி எம்மை ஏளனம் செய்யலாம். தங்கள் வளர்ச்சியைக் காண்பித்து எம்மை கேலி செய்யலாம். ஆனால் அதைக் குறித்து கவலைப்படாதிருங்கள், ஏனென்றால் வேகமாக வளர்வதெல்லாம் வேகமாகவே காணாமலும் போய்விடலாம். ஒரு காரியத்தின் துவக்கத்தைவிடவும் அதன் தொடர்ச்சி நன்றாக இருப்பது தான் முக்கியம். பெருமையுள்ளவனைவிடவும் பொறுமையுள்ளவன் உத்தமன். வேகமாகச் செல்பவனைப் பார்த்து ஆதங்கப்படவும் வேண்டாம், பொறுமையாகச் செல்வதையிட்டு வருந்தவும் வேண்டாம். ஏனென்றால் இயேசு கிறிஸ்து வரும் போது தான் எமக்குரிய பலன் கிடைக்கும். இப்போது இந்த பூமியில் நாம் வாழும் வாழ்க்கையைக் குறித்து அல்ல நித்திய நித்தியமாய் வாழ்கின்ற வாழ்க்கையைக் குறித்து சிந்திப்போமாக. **வெளிப்படுத்தல் 22:12 இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.**



பகுதி 3

# எது உங்களுக்கு வேண்டும்?

□ போதகர் வை.தேவதாஸ்




**கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.** என்ன வாலிபர்களே! வாசகர்களே! எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் வீட்டில் அனைவரும் நலமாக இருக்கின்றார்களா? நீங்கள் வளர்க்கிற மிருக ஜீவன்கள், செல்லப்பிராணிகள் எப்படியிருக்கிறது? அனைவரிற்கும் எனது உள்ளம் நிறைந்த விசாரிப்புக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிலவேளை இக் காலப்பகுதியில் நீங்கள் உங்கள் உறவுகளால் கைவிடப்பட்டு, நீங்கள் முழுவதுமாக நம்பின வர்கள் உங்களை மறந்து நீங்கள் அவர்களால் புறக்கணிக் கப்பட்ட நிலையில் இருக்கலாம்.

**ஆதியாகமம் 40:23 ஆனாலும் பானபத்திரக்கா ரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து விட்டான்.**

அன்று யோசேப்பு தனித்துவிடப்பட்ட நிலையில், உதவி செய்வார் யாருமற்ற நிலையில் இருந்த போது தனது முழுமையான துன்பக்கதையையும் இத் தலைவனிற்கு சொல்லி தனக்கு உதவி செய்யும்படி வேண்டிக்கொண்டான். இருப்பினும் அத் தலைவன் தான் நல்ல நிலையை அடைந்த போது யோசேப்பை மறந்துவிட்டான். இந்த நிலையில் இன்று நீங்கள் இருக்கலாம். நீங்கள் யாருடைய ஆசீர்வாதத்திற்காக உபவாசத்தோடு, கண்ணீரோடு பிரயாசப்பட்டீர்களோ இன்று அவர்கள் உங்களை அற்ப புழுவாக பார்க்கிற நிலை காணப்படலாம். அல்லது உங்கள் பணங்களையெல்லாம்

செலவழித்து யாருக்கு வேலை வாங்கிக் கொடுத்தீர்களோ அவர்கள் இன்று உங்கள் பணங்களை அடாவடித்தனம் செய்து உங்களையே தெரியாது என்று மறுக்கலாம்.

பிரியமானவர்களே! தலைவன் யோசேப்பை மறந்தாலும் அன்பின் தேவன் யோசேப்பை மறக்கவில்லை. அதே தேவன் தான் உங்கள் தேவனாய் இருக்கிறார். எனவே சோர்ந்து போகவேண்டாம். நிச்சயமாக அந்த தேவன் **உங்களுக்கு மங்களகரமான உத்தரவை அருளிச் செய்வார் - ஆதியாகமம் 41:16**

எனவே வாய்க்குள் முணுமுணுக்காமல் குரல் உயர்த்தி சத்தமாய் **"ஒரு நாளும் எனை மறவா தெய்வம் நீரே; நன்றியோடு உம்மைத் துதிக்கின்றேன்"** எனும் பாடலைப்பாடி தேவனைத் துதித்து மகிழுங்கள். யார் மறந்தாலும் மறக்காத இயேசு உங்களோடு இருக்கிறார். ஆமென்.

மேலும் கடந்த சஞ்சிகையின் ஆக்கத்தைக் குறித்து ஒரு சில வாலிபர்கள் என்னோடு உங்கள் சாட்சியைப் பகிர்ந்து கொண்டீர்கள். அத்தோடு வாலிபர்கள் அல்லாதோரும் வாசித்து உங்கள் மகிழ்வைத் தெரியப்படுத்தியிருந்தீர்கள். அனைவருக்கும் நிறைவான நன்றிகள். ஏனெனில் இக் காலப்பகுதியில் அனைவரின் வாழ்வையும் கைத்தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி என்பன ஆக்கிரமித்துள்ள தருணங்களில் நீங்கள் அனல் சஞ்சிகையை வாசிப்பது பாராட்டத்தக்கதே. **இத்தோடு நின்றுவிடாமல் நீங்கள் வாலிபர்களாக ஒன்றுகூடும் போது இருவரோ, அல்லது மூவரோ இப் பகுதியை சேர்ந்து வாசித்து தியானிப்பீர்களா? இன்னும் சபையைச் சேர்ந்த அல்லது சேராத வாலிபர்களுக்கும் இதை அறிமுகப்படுத்துவீர்களா? நிச்சயம் இதைச் செய்வீர்கள் என நான் நினைக்கிறேன்.**

தொடர்ந்து இவ் இதழின் பகுதிக்குள் ஜெபத்துடன் செல்வோம்.

# தேவன் அனுமதிக்காததை நீங்கள் அனுபவிப்பதில் எவ்வளவு ஆபத்து உண்டு என்பதை அறிவீர்களா?

கடந்த சஞ்சிகையில் லோத்து என்பவரின் நற்காரியங்கள், நற்பண்புகளைக் குறித்து வாசித்து அறிந்து கொண்டோம். இனிவரும் பகுதிகளில் அவரது கெட்ட செயல்கள், வேண்டாத பெலவீனங்கள், தவறான முடிவுகள் அதனால் அவர் அடைந்த தோல்விகள், இழப்புக்களைக் குறித்து வாசிக்கப் போகின்றோம். தயவு செய்து இதனை உங்கள் தலைஅறிவிற்காக அல்லது இதனை எழுதுபவரின் முறைகளில் பிழை கண்டுபிடிப்பதற்காகவோ வாசிக்காமல் ஒவ்வொரு பகுதியையும் உங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து திருத்தப்பட வேண்டியவைகளை திருத்திக் கொள்ளுங்கள். தேவன் விரும்பும் மனிதனாக வாழ முயற்சி எடுப்போமாக.

## 01. தனக்கு எது சரியோ அதனையே செய்பவராக இருந்தார்

என்ன தனக்குச் சரியாகத் தோன்றுவதை செய்வதில் என்ன தவறு இருக்கின்றது? என நினைக்கிறீர்கள் அல்லவா? ஆம் பிரியமானவர்களே, **"நமக்கு நாமே நீதிபதிகள் அல்ல; மாறாக நமக்கு நீதிபதி கர்த்தரே"** வேதாகமம் என்ன சொல்கிறது;

**நீதிமொழிகள் 14:12 மனுஷனுக்குத் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.** இவ் வசனத்தினை இலகு தமிழ் மொழி பெயர்ப்பில் இவ்வாறு; **மனிதனுக்குச் சரியானதாகக் காணப்படுகின்ற வழி உண்டு; ஆனால் அதுவோ முடிவில் மரணத்திற்கே வழி நடத்துகிறது** என்று மொழிபெயர்த்துள்ளனர் *International Bible Society Lanka (Gte) Ltd* நிறுவனத்தினர்.

**ஆம் நமது பார்வைக்கு செம்மையானதாக, சரியானதாக காணப்படுகின்றவைகள் எல்லாம் கடைசி வரைக்கும் நமக்கு திருப்திகரமானதாக இருக்கும் என நம்ப முடியாது.**

*இப்படித்தான் ஓர் வாலிபன் ஓர் பெண்ணைக் காதலித்தானாம். ஏனெனில் அவளது சுபாவங்கள் அனைத்தும் இவனுக்குத் திருப்தியைக் கொடுத்தது. இன்னும் அவளை அவன் பரீட்சிப்பதற்காக அவளை அவன் சந்திக்கும் போதெல்லாம் வேண்டாத வார்த்தைகளினால் வேண்டுமென்றே அவளைக் கோபப்படுத்திப்பார்ப்பானாம். அவளும் மிகப் பொறுமையுடனும், சிரித்த முகத்துடனும் அவனது செயல்களையும் வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்வாளாம். இதனால் இவ் வாலிபனது உள்ளம் மிகவும் குதூகலித்து திருப்தியடைந்தது. எனது எதிர்கால மனைவி மிகவும் பொறுமைசாலி, அன்புள்ளவள் என கற்பனை செய்தான். அவளையே திருமணமும் செய்து கொண்டான். திருமணம் முடித்து ஒரு சில நாட்களின் பின் ஏதோவொரு சிறிய காரியத்திற்காக இவன் அவளை ஏசிவிட்டான். அவளோ மிகவும் ஆத்திரப்பட்டு மிக்கோபமாக அவனைத் திட்டித்தீர்த்தாள். அதிர்ச்சியில் வாயடைத்துப் போனவன் அவளைப் பார்த்து, காதலித்த நாட்களில் எவ்வளவோ உன்னை நான் சினப்படுத்தியும் நீ கோபப்படவில்லையே, இப்பொழுது ஏன் இச் சிறு காரியத்திற்காக இவ்வளவு கோபப்படுகின்றாய் என்றானாம். அவளும் அவனைப் பார்த்து நீ அப்படி நினைத்தது உன்னுடைய தப்பு. அப்பொழுது என் கோபத்தை உன்னில் என்னால் காண்பிக்க முடியவில்லை. ஏனெனில் நீ என்னைவிட்டுவிடுவாய் என்ற பயத்தினால் பொறுமையாய் இருந்து நீ சென்ற பிற்பாடு எனது கோபத்தையெல்லாம் எங்கே காண்பித்தேன் என்பதை வந்துபார் என சாப்பாட்டு மேசையின் விரிப்பை எடுத்து காண்பித்த போது*

*அவ் மேசையைச் சுற்றிலும் நாய் கடித்ததைப் போன்று கடித்த காயங்கள் நிறைந்து காணப்பட்டது. என்ன என இவன் கேட்ட போது உம்மில் இருந்த எல்லாக் கோபத்தையும் இவ் மேசையைக் கடித்துத் தீர்த்துக் கொண்டேன் என்றாளாம்.*

உண்மை தான் இவ் உலகத்தில் நாம் காண்பவைகள், நம்புபவைகள் அனைத்தும் வெறும் கானல் நீரே. எது எமக்குப் பொருந்தும் அல்லது பொருத்தம் என நாம் நினைக்கிறோமோ அதுவே எமது வாழ்வின் துன்பத்திற்கான காரணமாக மாறிவிடுகின்றது. நாம் நமது மனதில் நினைப்பதெல்லாவற்றையும் அடைந்து விடலாம். ஆனால் அது நமது மனதை ரணமாக்கும் என்பதையும் மறந்து போகக்கூடாது. நாம் அனுபவிக்கும் இன்பங்கள் அர்த்தமற்றவைகளே.

சிரமத்தைப் பொருட்படுத்தாது வேதாகமத்தினை எடுத்து **பிரசங்கி 2:1-11** வசனங்களை வாசித்துப் பாருங்கள். பிரசங்கி சொல்கிறார்; **பிரசங்கி 2:4 நான் பெரிய வேலைகளைச் செய்தேன், எனக்காக வீடுகளைக் கட்டினேன், திராட்சைத் தோட்டங்களை நாட்டினேன்.** மேலும் **பிரசங்கி 2:11 என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை.**

ஆம் அருமையானவர்களே உலகப்பிரகாரமான மகிழ்ச்சிகள், மதுபானங்கள், செல்வங்கள், பலவிதமாக கஷ்டப்பட்டு பல முயற்சிகள் எடுத்து எங்களுக்காக பொருட்களைச் சேர்த்தல், நமது மனதினையும் சிந்தையையும் இலகுபடுத்துவதற்காக இசைக் கலைகள் போன்றவற்றில் ஈடுபடுதல், நமக்கு எது விருப்பமோ அதையெல்லாம் செய்து நமது விருப்பத்தின்படியெல்லாம் அனுபவிப்பது யாவும் மயையே என பிரசங்கி மூலம் தேவன் எமக்கு கூறுகின்றார். இக் காலத்தில் சிறியவர் தொடங்கி பெரியவர் வரைக்கும் மனம் போன போக்கில் கண்கள் இச்சித்த அனைத்தையும் அனுபவித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. தனக்காக பெரிய வேலைகளைச் செய்தும் அதில் திருப்தி காணாதவராக பிரசங்கி இருந்ததைக் காணமுடிகின்றது.

உங்களையே உருவாக்கி உங்களைப் பெயர் சொல்லி அழைத்து உங்களுக்காக தனது ஜீவனை ஒப்புக்கொடுத்து இன்றும் உங்களை நேசிக்கிற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நீங்கள் சார்ந்து கொண்டு அவர் உங்கள் வாழ்க்கையில் வைத்திருக்கும் நோக்கத்தினை அறிந்து அதற்காக செயற்படுவதனை உங்கள் இலக்காக கொள்ளாவிடில் உங்கள் வாழ்க்கையும் அர்த்தமற்றதாக மாறிவிடும்.

இதனை வாசிக்கின்ற நீங்கள் இன்று உங்கள் வாழ்க்கையை சற்று திரும்பிப் பாருங்கள். உங்களுக்கென்றும், உங்கள் குடும்பத்திற்கென்றும், உங்கள் எதிர்காலத்திற்கென்றும் பல அர்ப்பணிப்புக்களைச் செய்து பல வேளைகளைச்

செய்த நீங்கள், **"உங்களை உருவாக்கி பெயர் சொல்லி அழைத்த தேவனுக்காக என்ன செய்துள்ளீர்கள்? உங்களின் நித்திய ஜீவனுக்காக, மறுவாழ்விற்காக என்ன செய்துள்ளீர்கள்?"** சற்று உங்களை பார்த்து நீங்களே இந்த இரு கேள்விகளையும் கேட்டுப்பாருங்கள். உங்கள் பதில் என்னவாக உள்ளது?

இப்படித்தான் லோத்துவும் தன் சுயசித்தத்திற்காக தன்னை ஒப்புக்கொடுத்து தன் எதிர்கால வாழ்வினை இருளாக்கிக் கொண்டதை **ஆதியாகமம் 13:10-11**இல் வாசிக்கின்றோம்.

**ஆதியாகமம் 13:10a அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான்.** தான் கண்டதினை லோத்து தெரிவு செய்தாரேயல்லாமல் தேவன் தருவதற்கு பொறுமையாக காத்திருக்கவில்லை.

**ஆதியாகமம் 13:10b கர்த்தர் சோதோமையும் கோமோராவையும் அழிக்குமுன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது.** பார்வைக்கு யாவும் குளிர்ச்சி யாகத் தான் காணப்படும். எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**ஆதியாகமம் 13:11 அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப்பட்டுப்போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்.** இதனை வாசிக்கின்ற நீங்கள் எங்கே? யாருடன்? எதற்காக? பிரயாணப்பட எத்தனித்துக் கொண்டிருக்கிறீர்கள்? தயவு செய்து உங்கள் பிரயாணத்தினை நிறுத்தி கர்த்தர் காரியத்தை வாய்க்கச் செய்யும் வரைக்கும் பொறுமையாகக் காத்திருங்கள்.

*இப்படித்தான் இந்தியாவில் ஓர் வாலிப சகோதரி தன் பெற்றோருக்கு தெரியாமல் எப்பொழுதும் பொழுதுபோக்காகதான் அறியாத ஓர் வாலிபனுக்கு தொலைபேசியில் குறுஞ்செய்தி (Chatting) அனுப்பிக் கொண்டு வந்தாள். இருவரும் இணைபிரியாத நண்பர்களாகி விட்டார்கள். இவள் ஓர் பட்டணத்தையும் அவன் இன்னொரு பட்டணத்தையும் சேர்ந்தவர்கள். இந்த நிலையில் இவ் வாலிபனுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு திருமண நாளும் குறிக்கப்பட்டது. எனவே இவனும் தனது Chatting நண்பியை தனது திருமணத்திற்கு வரும்படி அன்போது அழைத்தான். இவளும் அதை ஏற்றுக்கொண்டு தன் பெற்றோருக்குத் தெரியாமல் முகம் அறியாத அந்த நண்பனின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக பல மைல்கள் கடந்து சென்றாள். திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மணமகன் இவளை தனது நண்பர்களிற்கும் அறிமுகம் செய்து வைத்தான். வேறொரு பட்டணத்தில் இருந்து இவள் வந்தமையால் இவளை மிகவும் கண்ணியமாகவும், அன்பாகவும் உபசரித்தனர். எல்லா நிகழ்வுகளும் நடு இரவில்*

*நிறைவுக்கு வரவே மணமகனும் தனது நண்பர்களிடம் அவளை குறிப் பிட்ட புகையிரத நிலையத்திற்கு கொண்டு சென்று விட்டுவரும்படி கூறினான். அவர்களும் அவளை புகையிரத நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் செல்லும் வழியில் காவல்துறை (Police) வருவதைக் கண்ட இவ் வாலிபர்கள் தாங்கள் யாவரும் ஆண்கள் ஆனால் ஓர் பெண்ணை இரவில் எங்கே கொண்டு செல்கிறீர்கள் என்று விசாரிப்பார்கள். பின்பு யாவும் அவமானமாகவிடும் என சிந்தித்து அவளை தனியே நடு வீதியில் விட்டுவிட்டு நாலா திசையிலும் சிதறிப்போய்விட்டார்கள். இப்பொழுது தெரியாத இடத்தில் இரவில் நிர்க்கதியாகிப் போன இவ் இளம் பெண் தப்பிக் கொள்ள நினைத்து வீதியின் அருகில் இருந்த ஓர் பெரிய பெட்டியின் பின்பதாக சென்று மறைந்து கொண்டாள். இதனை எங்கிருந்தோ ஏதேச்சையாக கவனித்துக் கொண்டிருந்த ஓர் ஆட்டோ சாரதி இன்னும் தனது நான்கு நண்பர்களுக்கு இதைத் தெரியப்படுத்தி அனைவரும் சேர்ந்து வந்து அந்த இளம் பெண்ணைக் கடத்திக் கொண்டு சென்று அதிகாலை வரைக்கும் அவளை கற்பழித்த பின்னர் குற்றுயிராய் புகையிரத நிலையத்திற்கு அருகில் தள்ளிவிட்டுச் சென்றுவிட்டார்கள்.*

பாருங்கள் தன் பெற்றோரின் ஆலோசனை, பாதுகாப்பு இல்லாமல் வாலிபத்துடிப்பில் தான் சரியென நினைத்ததை செய்யப்போய் தன் முழு வாழ்வையுமே இன்று அவள் இழந்து போய் நிற்பதை இச் சம்பவம் மூலமாக அறிந்து கொண்டிருப்பீர்கள்.

இதைப் போலவே லோத்துவும் உண்மையில் தனது உறவினரும் வயதில் மூத்தவருமான ஆபிரகாமுக்கு முதலில் தெரிந்து கொள்ளும் உரிமையைக் கொடுத்திருக்க வேண்டும். அவர் அதனைச் செய்யாதபடியினால் தனது வாழ்க்கை யில் நடக்கக்கூடாத, சகிக்க முடியாத எத்தனையோ பாடுகளை அனுபவித்தார்.

ஆம் நண்பர்களே! **விட்டுக்கொடுப்பவர்கள் கெட்டுப்போவதில்லை; கெட்டுப்போகிறவர்கள் விட்டுக்கொடுப்பதில்லை** என்பது போல் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து நல்ல இடத்தினை தனக்கென்று தெரிந்தெடுத்ததனைவிட ஆபிரகாமோடு சேர்ந்து ஜெபித்து தேவன் தரும் இடத்தினை தெரிந்தெடுத்திருக்கலாம்.

**இதனை வாசிக்கின்ற நீங்களும் தெரிந்தெடுக்க வேண்டிய சூழ்நிலைகள் வரும் போது தேவ ஆலோசனையைக் கேட்டு, தேவ சித்தப்படி தேர்ந்தெடுக்க கவனமாயிருப்பீர்களாக!** ஆண்டவர் உங்களை ஓர்போதும் கைவிடவேமாட்டார் - ஆமென்.

உங்கள் சாட்சிகளையும் ஜெப விண்ணப்பங்களையும் மறவாமல் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். கிருபை உங்களோடிருப்பதாக.

# உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும்; உன் பிந்தின நந்குணம் உத்தமமாயிருக்கிறது.






❒ திருமதி. J.பிலிப்

**தே**வ கிருபையினால் 2019ஆம் ஆண்டில் ஆறு மாதங்களை நாம் கடந்துவிட்டோம். அனல் சஞ்சிகையின் பெண்கள் பக்கமானது **"உன் குணத்தைக் குறித்து ஆராய்ந்து பார்க்கும் படி"** உன்னை அழைக்கிறது. சகோதரியே ஜெப சிந்தையுடன் தொடர்ந்து இப் பகுதியை வாசிப்பாயாக.

**ரூத் 3:10b உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமா யிருக்கிறது.** என்று போவாஸ் ரூத்தைப் பார்த்துக் கூறியதை நாம் பார்க்கிறோம். நற்குணத்திலும் கூட இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று முந்திய நற்குணம், அடுத்தது பிந்திய நற்குணம். ரூத் நல்ல குணமுடையவளாகத் தான் இருந்தாள். ஆனால் போவாஸ் அவளைச் சந்தித்த பிறபாடு தான் அவளுடைய நல்ல குணத்தை எடுத்துக் கூறி அதிலும் **"பிந்தின நற்குணத்தின் உத்தமத்தை"** போவாஸ் கண்டார்.

இதை வாசிக்கும் சகோதரியே, உன்னையும் பார்த்து உன் தேவன் இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்ல வேண்டும் என்று விரும்புகிறாயா? அதற்கு நீ செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு.

முதலாவது ரூத்தின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் அவளுடைய நற்குணம் **மாமி மீது வைத்திருந்த அன்பும், அவளை கனப்படுத்துவதிலும் உத்தமம் காணப்பட்டது.**

ஏனெனில் மாமியார் ரூத் - ஓர்பாள் ஆகிய இருவருக்கும் தாய் வீட்டிற்கு திரும்பிப் போங்கள் என்றாள். ஓர்பாள் மாமியைவிட்டுப் போய் விட்டாள். ரூத்தோ மாமியை பற்றிக் கொண்டாள். **ரூத் 1:17b மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்.**

ரூத்துக்கு தன் தாய் வீட்டிற்குப் போகக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கொடுத்த போதும்

அவளுடைய நற்குணம் தான் திருமணம் முடித்த வீட்டிலே கடைசிவரை மாமியுடன் தங்கி இருக்க வேண்டும் என்ற நற்குணம். இது தன்னுடைய கடமையில் உத்தம குணத்தைக் காண்பிக்கிறது.

வயலில்கதிர்பொறுக்கிக்கொண்டுவருவதற்கு மாமியிடம் உத்தரவு கேட்கிறாள் ரூத். இது ஆலோசனையைக்கேட்டுநடக்கும்உத்தமகுணம்.

வயல் வெளியிலே போய் அறுக்கிறவர்கள் பிறகே சென்று அரிக்கட்டுக்களிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக் கொள்ள உத்தரவு கேட்டுக்கொள் கிறாள். **ரூத் 2:7 அறுக்கிறவர்கள் பிறகே அரிக் கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக் கொள்ளுகிறேன் என்று அவள் என்னிடத்தில் கேட்டுக் கொண்டாள்; காலமே துவக்கி இதுவரைக்கும் இங்கே இருக்கிறாள். இப்பொழுது அவள் குடிசைக்கு வந்து கொஞ்சநேரந்தான் ஆயிற்று என்றாள்.** இது ரூத்தின் தாழ்மையான உத்தம குணத்தைக் காண்பிக்கிறது.

போவாஸ் ரூத்தைப் பார்த்து பொறுக்கிக் கொள்ள வேறு வயல்களுக்குப் போகவேண்டாம் என்ற போது அவள் கீழ்ப்படிந்து இருந்தாள். அவளுடைய கீழ்ப்படிதலின் உத்தம நற்குணத்தை இது காண்பிக்கிறது.

ரூத்தின் உத்தம நற்குணத்தின் நிமித்தம் அவளுக்குபாதுகாப்பு கிடைக்கிறது. அவளை எவரும் தொடாதபடிக்கும், அவளை ஈனம் பண்ணவோ, அதட்டவோ கூடாது என்று வேலைக் காரர்களுக்கு போவாஸ் கட்டளையிடுகிறார். **ரூத் 2:15-16 (15.) அவள் கதிர் பொறுக்கிக்கொள்ள எழுந்தபோது, போவாஸ் தன் வேலைக்காரரை நோக்கி: அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக் கிக்கொள்ளட்டும்; அவளை ஈனம்பண்ணவேண்டாம். 16. அவள் பொறுக்கிக்கொள்ளும்படிக்கு அவளுக் காக அரிகளிலே சிலதைச் சிந்தவிடுங்கள், அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான்.**

ரூத் வயலில் இருந்த வந்தவுடன் அங்கே நடைபெற்ற அனைத்தையும் மாமியிடம் ஒளிவு மறைவு இல்லாமல் கூறுகின்றாள். இது அவளு டைய பேச்சில் உத்தம குணத்தைக் காண் பிக்கிறது.

ரூத் இஸ்ரவேலின் தேவனைத் தன் தேவனாக ஏற்றுக்கொண்டு அவர் வழிகளில் நடந்தபடியால் அவளுக்கு ஒரு வாக்குத்தத்தம் கிடைக்கிறது. **ரூத் 2:12 உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக. இஸ்ரவே லின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கல மாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக என்றான்.**

வருடத்தின் நடுப்பகுதி யில் வந்திருக்கும் சகோதரியே, ரூத்துக்கு நிறைவான பலன் கிடைக்கச் செய்த தேவன் உனக் கும் பலன் கொடுக்க ஆயத்த மாய் இருக்கிறார். உன் நற்குணத்தை ஆராய்ந்து பார்? அதில் உத்தமம் உண்டா? ரூத்தினுடைய அன்பிலே, கனப் படுத்தலிலே உத்தமம், கடமையில் உத்தமம், ஆலோசனையைக் கேட்டு நடந்ததில் உத்தமம், தாழ்மையான உத்தமகுணம், கீழ்ப்படிதலில் உத்தமம், பேச்சிலே உத்தமம்.

ரூத்தின் வாழ்க்கையில் நிறைவான பலன் கிடைக்கக் காரணம் அவளுடைய உத்தம குணம். நம்முடைய நற்குணத் தில் உத்தமத்தைக் கடைப்பிடிப் போம், அப்போது நிறைவான பலன் நம் தேவன் நமக்கு கொடுப்பார்.

**சங்கீதம் 84:11b உத்தம மாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்.**



# எறும்பின் ஜாக்கிரதை

❒ ஜசிந்தா அக்கா




அழகான காட்டிலே அழகான காட்டுக் கோழி ஒன்று அகமகிழ்ந்து ஆடிப் பாடிக் கொண்டிருந்தது. அந்தப் பாதையால் எறும்பு ஒன்று அரிசி ஒன்றைக் கஷ்டப்பட்டு சுமந்து கொண்டு சென்றதைக் கண்டது. எறும்பாரே ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டு அரிசி யைச் சுமந்து கொண்டு செல்கிறீர்? சொற்ப நேரம் இந்த சுமையை இறக்கி வைத்துவிட்டு வா, நாம் ஆடிப்பாடி சந்தோஷ மாய் இருப்போம். பார் இந்த இடம் மிகவும் குளிர்ச்சி யாகவும் அழகாகவும் இருக்கிறது என்றது காட்டுக்கோழி.

ஐ...ஐ...யோ.... இப்பொழுது எனக்கு ஆடிப்பாட நேரம் இல்லை. எனக்கு அதிகமான வேலை இருக்கிறது. மழை காலத்திற்காக உணவைச் சேர்த்து வைக்க வேண்டும். ஆகவே கஷ்டப்பட்டு இந்த அரிசியை சுமந்து கொண்டு செல்கிறேன் என்றது எறும்பு. கோழியாரே இந்தக் கோடை காலத்தில் நீர் ஆற அமர இருப்பதும் களியாட்டுக்களில் களிசுவர்ந்திருப்பதும் மாரி காலத்தில் உம்மைக் கஷ்டத்துக்குள்ளாக்கும். ஆகவே என்னோடே வாரும் உணவு சேர்க்கலாம் என்று கோழியை அழைத்தது. காட்டுக்கோழிக்கு எறும்பின் மீது அதிக விசனமும் கோபமுமாய் இருந்தது. என்னிடம் இருக்கும் உணவு போதும், "நான் கஷ்டப்படத் தேவையில்லை, கவலைப்படவும் தேவையில்லை" என்று மனதிற்குள் குறுகுறுத்தது. எறும்பு தன் சுமையைச் சுமந்து கொண்டு தன் வழியே சென்றுவிட்டது.

மழை காலம் வந்தது. வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் நேரமாயிற்று. குளிர் வாட்டியது. கைகால் குடங்க வேண்டியதாயிற்று. உணவும் கிடைப்பதாயில்லை.

காட்டுக்கோழிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. எறும்புகள் தங்கள் வீட்டில் திருப்தியாக உணவு உண்டு சந்தோஷமாய் குளிரில்லாமல் இருப்பதைக் காட்டுக்கோழி கண்டது. சீ.... வீணாக எறும்பைக் கோபித்து அதனுடைய ஆலோசனையைத் தள்ளினேனே! உணவை சேமிக்காததினால் இன்று நான் தான் கஷ்டப்படுகிறேன். முட்டாள் வேலை பார்த்துவிட்டேன். இப்பொழுது எறும்பினிடத்தில் போகமுடியாது என்று துக்கப்பட்டது.

இயேசப்பாவின் பிரியமான சின்ன தம்பி! தங்கையரே! மழை காலத்திற்கு உணவு தேவை என்று எறும்பு மிகவும் ஜாக்கிரதையாவும் சுறுசுறுப்பாகவும் அரிசியை சுமந்து கொண்டு சென்றதைப் பார்த்தீர்களல்லவா? அது போலவே நீங்களும் இயேசப்பாவின் வேத வசனங்களை நன்றாக வாசித்து மனதில் பதித்து வைக்க வேண்டும். ஏனென்றால் வேத வசனங்களைக் கேட்க முடியாத நாட்கள் நெருங்கிவிட்டது. இயேசு தன்னுடைய பிள்ளைகளை தன்னோடு கூட்டிச் செல்லப் போகிற காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்களும் இயேசுவோடு செல்ல ஆயத்தமாகுங்கள்.

**நீதிமொழிகள் 5:7 பிள்ளைகளே, என் வாயின் வசனங்களை விட்டு நீங்காதிருங்கள்.**

## வினா விடை - 94

01. "கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதை பரிசுத்தமாக்கினார்" என்று வாசிப்பதெங்கே?

02. "உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வுநாள்" எது?

03. "தீர்க்கதரிசி தன் தேவனுடைய ஆலயத்திலே பகையாளியாகவும் இருக்கிறான்" ; என்றது யார்?

04. "தீமை செய்ய பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்" எப்போது?

05. "தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்" என்றவர் யார்?

06. "பந்தியை ஆயத்தப்படுத்துங்கள், புசியுங்கள், குடியுங்கள்" என்றது யார்?

07. "கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார்" என வாசிப்பதெங்கே?

08. "கர்த்தர் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார்" என்று வாசிப்பது எங்கே?

09. மலையின் மேல் பலியிட்டு, போஜனம்பண்ணும்படி தன் சகோதரரை அழைத்தவன் யார்?

10. "உம்முடைய தேவன் உமக்குத் துணை நிற்கிறார்" என்றது யார்?



# விசுவாசமும் விடுதலையும் மகிமையான காலங்களைத் தரும்!

❑ பர்னபா



நற்செய்திப் பகுதி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே, சகோதரியே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த வருடத்தின் ஆறுமாதங்களும் வெகு வேகமாக கடந்து சென்றுவிட்டது. கடந்து போன ஆறு மாதங்களிலும் மகிழ்ச்சியான தருணங் களையும் சந்தித்து இருக்கிறோம். அதேபோன்று பல சோதனைகளையும், பாடுகளையும், மனக் குழப்பங்களையும், வியாதிகளையும், பல கேள்வி களையும் கடந்து வந்திருக்கிறோம்.

அதனால் அவநம்பிக்கை, சலிப்பு, விரக்தி, மனச்சோர்வு, எரிச்சல் ஆகியவற்றோடு நீ இப்போது வாழ்ந்து கொண்டிருக்கலாம். **நீ பட்டபாடுகளில் இருந்தும், சோதனைகளில் இருந்தும் வியாதிகளில் இருந்தும் விடுதலை யைத் தருவது தேவனுக்கு இலேசான காரியம். நீ செய்ய வேண்டியது விசுவாசத்தோடு இயேசு கிறிஸ்துவைப்** பற்றிப்பிடித்தக் கொண்டு முன்னேற **வேண்டும்.** அப்போது இயேசு கிறிஸ்து உன்னோடு கூட இருந்து பெரிய காரியங் களைச் செய்வார்.

பரிசுத்த வேதாகமத்தில் மிகவும் அருமையான சம்பவம்; **பன்னிரண்டு வருடமாக பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ. அவள் அனேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு தனக்கு உண்டானவை களையெல்லாம் செலவழித்தும் கொஞ்ச மும் சுகமடையாமல் அதிகமாக வருத் தப்பட்டாள். அப்போது அவள் இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு ஜனக்கூட்டத்திற்குள்ளே இயேசு கிறிஸ்து வுக்கு பின்னாக சென்று இயேசு கிறிஸ்து வின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். உடனே சுகம் பெற்று அந்த வேதனை நீங்கி ஆரோக்கியம் அடைந்ததை**

**தனது சரீரத்தில் உணர்ந்து கொண்டாள். மாற்கு 5:25-29.**

அன்பான சகோதரனே, சகோதரியே நீயும் இதேபோல தீராத வியாதியினால் பல வழிகளிலும் உன் பணத்தை செலவு செய்தும் சுகம் பெற்றுக்கொள்ளாமல் வேதனையோடு இருக்கலாம். அல்லது பல சோதனைகளினாலும் பாடுகளினாலும் மனவிரக்தியோடு சலித்துப்போய் இருக்கலாம். இந்த நிலையில் இருந்து உனக்கு விடுதலை தர இயேசு கிறிஸ்துவால் முடியும்.

அந்த ஸ்திரீ இயேசு கிறிஸ்துவைக் குறித்து தான் கேள்விப்பட்டதை நம்பி விசுவாசத்தோடு அவரது வஸ்திரத்தின் ஓரத்தை தொட தீர்மானித்தாள். அவ்வாறே தொட்டு சுகத்தைப் பெற்றுக் கொண்டாள். **அதே போன்று நீயும் இயேசு கிறிஸ்துவை விசுவாசத்தோடும் உன் முழு மனதோடும் தேடுவாயானால் உனக்கும் அவர் விடுதலை தருவார்.**

இயேசு கிறிஸ்து தம்மிடம் இருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்து ஜனக்கூட்டத்தை பார்த்து, என்னைத் தொட்டது யார் என்று கேட்டார். தான் சுகம் பெற்றதை அறிந்த அந்த ஸ்திரீ பயந்து, நடுங்கி இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக வந்து உண்மை எல்லாவற்றையும் சொன்னாள். இயேசு கிறிஸ்து அவளைப் பார்த்து உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது நீ சமாதானத்தோடே போய் உன் வேதனை நீங்கி சுகமாயிரு என்றார். **மாற்கு 5:30-34**

சகோதரனே, சகோதரியே நீ எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் எப்படியான சூழ்நிலையில் இருந்தாலும் நீ நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் இயேசு கிறிஸ்துவிடம் வரும் போது அவர் உன்னை கண்ணோக்கிப் பார்த்து உனக்கு உதவி செய்வார். **விசுவாசத்தின் மூலமாகத் தான் இயேசு கிறிஸ்துவிடம் நன்மைகளையும் விடுதலைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பது தான் உண்மை.** எனவே உன் பிரச்சினைகளும், வியாதிகளும், கஷ்ரங்களும் உன்னை புலம்ப வைத்துக் கொண்டு இருக்கலாம். விசுவாசத்துடன் இவைகளை சந்தியுங்கள். இயேசு கிறிஸ்துவை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். மகிமையான காலங்களையும் மகிழ்ச்சியான நாட்களையும் உன் வாழ்க்கையில் நிச்சயம் இயேசு கிறிஸ்து தருவார்.

**யோவான் 14:14 என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.**



# குறுக்கெழுத்துப் போட்டி - 91
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

02. தானியேல் (தானியேல் 9:23)
05. இலச்சை (நீதிமொழிகள் 9:7)
09. மனம் (நீதிமொழிகள் 15:28)
11. பவுல் (IIதீமோத்தேயு 4:17)
15. சாப்நாத்பன்னேயா (ஆதி 41:45)

**வலமிருந்து இடமாக**

03. மோசே (எண்ணாகமம் 12:7)
04. தீக்குருவி (யோபு 39:13-18)
07. சேராகின் (யோசுவா 7:17)
10. சவுல் (Iசாமுவேல் 15:27,28)
12. சிம்சோன் (நியாயாதி 15:15)

**மேலிருந்து கீழாக**

01. கட்டளையை (நீதிமொழிகள் 3:1)
05. இரக்கம் (யாக்கோபு 2:13)
06. எசேக்கியேலை (எசேக்கியேல் 2:8-10)

**கீழிருந்து மேலாக**

08. அறிவு (நீதிமொழிகள் 2:10)
13. எசேக்கியேல் (எசேக்கியேல் 1:1)
14. ஏலி (Iசாமுவேல் 4:18)
15. சாலொமோன் (Iஇராஜா 8:65)

01. அனனியா - அப்போஸ்தலர் 5:4
02. சப்பீராள் - அப்போஸ்தலர் 5:10
03. ஜனங்கள் - மாற்கு 1:27
04. யாக்கோபு - லேயாள், ராகேல் ஆதியாகமம் 29:25-28
05. ரப்சாக்கே - எசேக்கியாவுக்கு - IIஇராஜாக்கள் 18:23
06. எசேக்கியாவின் தலைவர்கள் ஏசாயா தீர்க்கதரிசியிடம் - IIஇராஜா 19:3
07. கர்த்தராகிய ஆண்டவர் - ஏசாயா 65:17
08. எசேக்கியா ராஜா - ஏசாயா தீர்க்கதரிசி - IIநாளாகமம் 32:20
09. எசேக்கியாவின் தலைவர்கள் - IIஇராஜாக்கள் 19:1-3
10. சாலொமோன் - பிரசங்கி 1:9

# வினாவிடை - 93
## சரியான பதில்கள்




## அதோனிராம் ஜட்சன்

## 1788 - 1850



### பயணங்கள் துவங்கட்டும்

வயது 20. வாழ்க்கையை ரசிக்கவும், ருசிக்கவும் நினைக்கும் பருவம். அதோனிராம் ஜட்சன் வாழ்வை அனுபவிக்க புறப்பட்டார்.

இரவு நேரம். சத்திரம் ஒன்றில் இடம் கேட்க, காலியாயிருந்த ஒரே அறை கிடைத்தது. நிம்மதியாய் தூங்க நினைத்தவரின் நிம்மதியை பக்கத்து அறையில் தங்கியிருந்த நோயாளி கலைத்துப்போட்டான். நோயாளியின் மரண ஓலங்கள் தூக்கத்தை வரவிடாமல் தடுத்தது.

மறுநாள். காலையிலேயே ஒரு துக்க செய்தி. நோயாளி மரித்துவிட்டான் என்பதே அது. ஜட்சன் தன் பயணத்தை துவங்கும் முன் அந்நோயாளியைப் பற்றி அறிய மிகுந்த ஆவல் கொண்டார். அந்தோ! அதோனிராமுக்கு உலகமே ஒரு நிமிடம் தாறுமாறாக சுற்றியது. தன் உயிர் நண்பனே அவன் என்பதை அறிந்ததும் அதிர்ந்து போனார். "கடவுள் இல்லை" என்ற கொள்கையுடைய அவனின் கதை முடிந்து போனதை எண்ணி கண்ணீர்விட்டார்.

1808இல் ஜட்சன் தன்னை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தார். மேரி 'சில்டைன் என்பவரை மணந்தார். இருவருமாக இறைப்பணி செய்ய இந்தியா வந்தனர்.

இந்தியாவின் இருண்ட காலம் அது. ஒளியை ஏற்றுக் கொள்ள முடியாததால் ஜட்சன் பர்மா நோக்கி தன் பயணத்தை தொடர்ந்தார். பர்மிய

மொழியை கற்கலானார். பர்மாவில் நடைபெற்ற கொடுங்கோல் ஆட்சியால் இரண்டு வருட கடுங்காவல் தண்டனை பெற்றார் ஜட்சன். மீண்டும் விடுதலையடைந்து பர்மிய மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்து பர்மா மக்களின் வாழ்வில் ஒளியேற்றினார்.

தன் குழந்தைகளையும், மனைவியையும் மண்ணில் விதைத்த ஜட்சன், கடல் யாத்திரையின் போது மரித்து கடலில் அடக்கம் பண்ணப்பட்டார். ஜட்சன் ஏற்றிய தீபம் இன்றும் பர்மாவில் சுடர்விட்டு பிரகாசிக்கின்றது.

**அன்பரே! நற்செய்தியை அறிவிப்பதில் உமது நாட்டம் என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: ஒரு குறுகிய காலக் கட்டத்திற்கு மட்டுமே என்றில்லாமல் ஒரு வாழ்க்கை முழுவதற்குமாய் என்றெண்ணி புறப்படுங்கள் — அதோனிராம் ஜட்சன்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 12**

# ஜேம்ஸ் ஹெப்பர்ன் 1815 - 1911



## அர்ப்பு மிகுதி

வேலை கிடைக்கவில்லை. இது பல இளைஞர்களின் மனக்குமுறல். எத்தனையோ இடத்திற்கு விண்ணப்பம் கொடுத்தேன். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என்று தன்னையே நொந்து கொள்வார்கள். ஆனால் வேலை கிடைத்த பலருக்கோ தங்கள் பணியிடங்களில் நிம்மதி கிடைக்கவில்லை என்பார்கள். சரியான தெரிவு செய்தல் இதில் முக்கியமானது.

ஜேம்ஸ் ஹெப்பர்ன் ஒரு டாக்டர். தன்னுடைய வேலையை முழுவதுமாக ஆண்டவருடைய கரத்தில் அர்ப்பணித்தார். உலகப்பிரகாரமாக உழைப்பதைக் காட்டிலும், உன்னதருக்காக உழைக்க வேண்டும் என்பதில் மிகுந்த பாரம் உடையவராகக் காணப்பட்டார். மருத்துவ மிஷனெரியாக ஷியாம் என்ற இடத்திற்குச் செல்ல நினைத்தார். ஆனால், சூழ்நிலைகளின் சாதகமற்ற நிகழ்வுகளினால் 1841ஆம் வருடம் சிங்கப்பூர் சென்றடைந்தார்.

கடல் பயணத்தின் போது, ஜேம்ஸின் மனைவி கிளாரா கர்ப்பிணியாயிருந்தார். துரதிஷ்டவசமாக அக்கரு கலைந்து போனது. மிகவும் வேதனைக்குள்ளானார் ஜேம்ஸ். எனினும் கிறிஸ்துவுக்குள் தன்னை தேற்றிக்கொண்டார். ஓபியம் போர் காரணமாக சீனாவில் இவர் அனுமதிக்கப்படாததால் இரண்டு வருடத்திற்கு பின் சீனா சென்றார். 5 வருடங்கள் அங்கு கடினமாக பணி செய்து, கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார்.

1859ஆம் வருடம் ஜப்பான் நாட்டிற்கு மிஷனெரியாகத் தன்னுடைய பயணத்தை ஆரம்பித்தார். அங்கு மருத்துவமனை, பள்ளிக்கூடங்களைக் கட்டினார். ஜப்பான் – ஆங்கில அகராதியை வெளியிட்டார். ஜப்பானிய மொழியில் வேதாகமத்தை மொழி பெயர்ப்பதில் ஆர்வமுடன் ஈடுபட்டார். இவரின் இரண்டாவது குழந்தையும் பிறந்து சில மணி நேரங்களில் இறந்து போனது. சொல்லொண்ணாத் துயரத்தில் ஆழ்ந்தார். எனினும், தன் அழைப்பில் நிலைத்து நின்று அங்கு தன் பணியை வெற்றிகரமாக செய்து, 96ஆம் வயதில் இறைவனுக்குள் இளைப்பாறினார்.

**அன்பரே! ஊழியத்தினால் ஏற்படும் இழப்புகளை தாங்கிக் கொள்ள தயாரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நமது இழப்புகள் எவ்வளவு தான் பெரிதாக இருப்பினும், நம் எஜமானர் நம்மை அழைக்கும் வரை நமது பணிகளை விட்டுவிடுதல் கூடாது. — ஜே.ஆர்மில்லர்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 13**

---

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"நான் மூன்றெழுத்துக்களுடையோன், நான் துடித்தேன் – மீனுமல்ல நான் கொதிப்பேன் – சோறுமல்ல, நான் எரிபந்தமானேன் – நெருப்புமல்ல, நான் சரிந்தேன் – மண்மேடுமல்ல, நான் தொனிக்கிறேன் – சுரமண்டலமுமல்ல, நான் மனிதரோடுகூட எப்போதுமிருந்தாலும், நான் மறைவாயிருக்கிறேன்" நான் யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*


---

அனல் 2019 வைகாசி - ஆனி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**அத்தாலியாள்** (11இராஜா 8:16-18, 1இராஜா 21:25, 11நாளா 21:5-6, 11நாளா 22:1-3,10)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி 92



## இடமிருந்து வலமாக

01. சவுல் இஸ்ரவேலரை இங்கே தொகை பார்த்தான்
04. தேவன் எகிப்திலே அடையாளங்களையும் இந்த வெளியிலே தம்முடைய அற்புதங்களையும் செய்தார்
05. எலியாவை வழியில் கண்டு முகங்குப்புற விழுந்து வணங்கியவன்
07. "நீரே என் இரட்சிப்பின் தேவன்" என்றவர்
11. இவன் சந்ததியில் தாவீது வந்தார்

## வலமிருந்து இடமாக

02. மீசியா நாட்டிலுள்ள ஒரு பட்டணம்
04. அதோனியா இந்தக் கல்லின் அருகே ஆடுகளையும், கொழுத்த ஜந்துக்களையும் அடித்தான்
08. இஸ்மவேலின் மூத்த குமாரன்
10. நாகோரின் அப்பா
14. சவுலின் ஊர்
16. அகசியாவின் தாய்

## மேலிருந்து கீழாக

02. இவர்கள் கொந்தளிக்கும் கடலைப் போலிருப்பார்கள்
03. ............ நிறைவேறுவது ஆத்துமாவுக்கு இனிது; தீமையை விட்டுவிலகுவது மூடருக்கு அருவருப்பு
06. இந்த ராஜா புறாவைப் போல புலம்பினார்
09. இவன் மிகாயாவை கன்னத்தில் அடித்தான்

## கீழிருந்து மேலாக

12. "நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது
13. நன்மை செய்ய மனுஷன் கொண்டிருக்கும் ..................... வாஞ்சை
15. தாவீது தப்பவிட்ட யோனத்தானின் குமாரன்




❏ சகோதரன் றொபின் (கொழும்பு)




எரேமியா 1:5-10 (5.) நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார். 6. அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றேன். 7. ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. 8. நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி, 9. கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என்வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். 10. பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான்

**இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.**

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடு பேசினார். அனைத்து தேவமனிதர்களுடைய வாழ்க்கையிலும் அவர்களுடைய ஆரம்ப நாட்களில் அவர்கள் தேவனால் அழைக்கப்பட்ட போது, அவர்கள் தாங்கள் பெலவீனர்கள் என்று தேவனிடத்தில் கூறியதைப் பார்க்கிறோம். ஆனாலும் அப்படிப்பட்ட நிலமையிலும் கூட தேவன் சொன்னார்: **"நான் உன்னோடு கூட இருந்து பெரிய காரியங்களை நடப்பிப்பேன்"** என்று. நாமும் ஒருவேளை நாம் பெலவீனர், சிறுபிள்ளைகள், எங்களுக்கு எதுவும் தெரியாது, எங்களால் நன்றாக பேசமுடியாது, நாம் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில் வாழ்கிறோம் என்று எங்களுடைய குறைகளையே பேசிக் கொண்டிருக்கலாம். **ஆனால் நம்மைக் கண்டு அழைத்த தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறபடியினால் கர்த்தர் இன்றைக்கும் எம்மோடு கூட இருந்து நம்மை பெலப்படுத்தி தன்னுடைய திட்டங்களை, சித்தங்களை நிறைவேற்றுகிறவராக இருக்கிறார்.** நாம் அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிந்து நடக்கிற போது அவர் நம்மை ஆயத்தப்படுத்தி பயன்படுத்த வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

**"நான் யார்? அல்லது எனது அடையாளம் என்ன?"** 'நான் எதற்காக இந்தப் பூமியில் வாழ்கிறேன்?' என்று நம்மைப் பார்த்து நாம் சில கேள்விகளைக் கேட்க வேண்டும். கர்த்தர் என்னைக் கொண்டு நிறைவேற்ற சித்தம் கொண்டிருக்கிற காரியம் என்ன? நான் எங்கே வாழ வேண்டும்? எந்த காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும்? என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். எம்முடைய வாழ்க்கையில் **"நான் யார்?"** என்பதை நாம் அறிந்து கொள்ளாவிட்டால் நாம் தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்து முடிக்க முடியாது. இன்றைக்கு உலகத்தில் இருக்கிற மிகப்பெரிய பிரச்சினை 'மனிதனுக்கு தான் யார் என்பதை அறியமுடியாமல் இருக்கிற போது, அவன் தத்தளித்து தன்னுடைய சொந்த முயற்சியில் செயற்படுகிறவனாக இருக்கிறான்'. உதாரணமாக, யாக்கோபு, யோவான் என்ற இரு சகோதரர்கள் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து சொல்கிறார்கள்; இயேசுவே நீர் உம்முடைய ராச்சியத்தில் வருகிற போது எங்களில் ஒருவன் உம்முடைய வலது புறத்திலும் மற்றவன் உமது இடது புறத்திலும் அமரவேண்டும் என்று. அதற்கு இயேசு கிறிஸ்து கூறினார்: "நீங்கள் கேட்டுக்கொள்வது என்னவென்று தெரியுமா? ஒரு வேளை உங்களுக்கு அப்படித்தான் கொடுக்கப் பட்டிருந்தாலும் அதை தேவன் தாமே ஆயத்தம்பண்ணாவிட்டால் ஒருவனாலும் பெற்றுக்கொள்ள முடியாது" என்று கூறிவிட்டு அவர்களுக்கு ஆலோசனையாக ஒரு காரியத்தைக் கூறினார்; இந்தப் பூமியில் நீங்கள் பெரியவர்களாக இருக்க விரும்பினால் எல்லோருக்கும் நீங்கள் ஊழியம் செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு பணிவிடைக்காரர்களாக இருக்க வேண்டும் என்றார். **மாற்கு 10:45 அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.** இயேசு இந்த உலகத்திற்கு வந்தது "ஊழியம் கொள்ளும்படி அல்ல, அவர் ஊழியம் செய்யும்படியாகவே வந்தார்". நீங்கள் தேவனுக்காக ஊழியம் செய்ய வேண் டும், தேவனுக்காக முதன்மையான இடங்களில் இருக்க வேண்டும் என்றால் நீங்கள் ஊழியக் காரனாய் மாற வேண்டும்.

நமக்கெல்லாம் இருக்கக்கூடிய **மிகப்பெரிய உதாரணம் இயேசு கிறிஸ்து மாத்திரமே.** அவருடைய வாழ்க்கையை, ஊழியத்தை, அவர் யார் என்று அறிந்திருக்கும் போது மாத்திரமே நம்மை நாம் சரியான இடத்தில் நிலைநிறுத்துவதற்கு உதவியாய் இருக்கும். **எபிரெயர் 2:18 ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். எபிரெயர் 3:1 இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்;** எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை வாசித்துப் பார்த்தால் தூதர்களிலும் பார்க்க இயேசு எவ்வளவு பெரியவர், பிரதான ஆசாரியரைப் பார்க்கிலும் இயேசு எப்படி பெரியவர் என்பதைக் குறித்தெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. எபிரெயர் நிருபத்தை எழுதியவர்; "கிறிஸ்துவைக் கவனித்துப் பாருங்கள்" என்று எழுதுகிறார். கிறிஸ்தவர்களாகிய எங்களுடைய வாழ்க்கையில் நாம் வெற்றியுள்ளவர்களாக, நாம் யார் என்று கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரே நபர் இயேசு கிறிஸ்து மாத்திரமே. *மொனலிசா என்ற ஓவியத்தை பார்க்கிற ஒரு மனுஷனுடைய மனநிலை சந்தோஷமாக இருக்கும் போது பார்த்தால் அது சிரிப்பதைப் போன்று காணப்படும், அதே போன்று துக்கத்தோடு, கவலை யோடு அந்த ஓவியதைப் பார்த் தால் அதுவும் கவலையோடு இருப்பதைப் போன்று தோன்றும்.* ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் நிலை எப்படி இருக்கிறதோ அது அந்த ஓவியத்தில் பிரதிபலிக்க ஆரம்பித்து விடுகிறது. ஆனால் வேதம் நமக்கு அப்படிக் கூறவில்லை.

வேதம் நமக்கு என்ன கூறுகின்றது என்றால், **எல்லாவற்றிலும் ஜெயம் எடுத்தவரும், எல்லாவற்றையும் ஜெயித்தவரும், மரணத்தை, பாதாளத்தை, பிசாசை ஜெயித்தவரும் யாரும் அவரைக் குற்றப்படுத்த முடியாதவருமாய் இருக்கிற அவரை கவனித்துப் பாருங்கள்.** நாம் கிறிஸ்துவைக் கவனித்துப் பார்க்கும் போது நம்முடைய வாழ்க்கை மாற ஆரம்பித்துவிடுகிறது. அவருடைய வெற்றியை நாம் தியானிக்கும் போது அவருடைய அன்பை பார்க்கும் போது எங்களுடைய வாழ்க்கையும் மாற ஆரம்பித்துவிடுகிறது. **1யோவான் 3:16 அவர் தம்முடைய ஜீவனை நமக் காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.** இன்றைக்கு உலகத்தில் இருக்கிற மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் அன்பு செலுத்த முடியவில்லை. ஆனாலும் வேதம் சொல்கிறது: கிறிஸ்து நமக்கு அன்பு செலுத்தியதினால் அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். ஒருவேளை ஒரு நல்லவனுக்காக, நீதிமானுக்காக ஒருவன் மரிக்கத்துணிவான். ஆனால் இயேசு கிறிஸ்து நாம் பாவிகளாக ஆத்தும மரணத்தில் இருக்கையில் அவர் நம்மீது அன்பு கூர்ந்தார். அன்பைக் குறித்து பேசுவோம் என்றால்; **யோவான் 21:15-17 (15.) அவர்கள் போஜனம் பண்ணினபின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். 16. இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்**

**கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். 17. மூன்றாந் தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியி னாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.**

இந்தப் பகுதியில் அன்புக்காக இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டி ருப்பதை பார்க்கலாம். இயேசு கேட்கிறார்: **"நீ என் மேல் அன்பாயிருக்கிறாயா?"** என்று. அதற்கு பேதுரு ஆம் ஆண்டவரே நாம் உம்மை நேசிக்கிறேன் என்று சொல்கிறார். "அகாப்பே" என்ற தேவனு டைய அன்பு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **தேவனுடைய அன்பு என்றால் எந்த எதிர்பார்ப்பும் இல்லாத அன்பு செலுத்து கிற தன்மை தான் அகாப்பே அன்பு.**

"பிலியோ" அன்பு – சகோதரத்துவ அன்பு. **இது எதிர்பார்ப்போடு செய்யப் படுகிற அன்பு.** இயேசு பேதுருவைப் பார்த்து என்மேல் அன்பாயிருக்கிறாயா என்று கேட்கிறார். எதையும் எதிர்பார்க் காமல் அன்பு செய்ய முடியுமா? அவன் சொல்கிறான்: ஆம் ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன். அதாவது ஆண்டவரே அகாப்பே அன்பல்ல, நான் சகோதரத்துவ அன்போடு உம்மை நேசிக்கிறேன் என்று. இரண்டாவது தடவையும் இயேசு அகாப்பே அன்பு உன்னிடத்தில் இருக்கிறதா என்று கேட்ட போது ஆம் ஆண்டவரே என்னிடத்தில் இருந்து சகோதர அன்பை தருகிறேன் என்று. ஆனால் இயேசு மூன்றாம் தடவை கேட்ட போது அவன் துக்கப்பட் டான். காரணம் மூன்றாவது தடவையும் **"நீ என்னை நேசிக்கிறாயா?"** என்று வசனம் வருகிறது. சரி, நீ அகாப்பே அன்பை அல்ல சகோதரத்துவமான அன்பையாவது காண்பிக்க முடியுமா? என்று கேட்ட போது அவன் துக்கப்பட ஆரம்பித்துவிட்டான். முன்பு சொன்னான், ஆண்டவரே நான் உம்மை மறுதலிக்க மாட்டேன், உம்மோடு கூட சிலுவையில் மரித்தாலும் மரிப்பேன், ஒரு போதும் உம்மை மறுதலிக்கமாட்டேன். ஆனால் இறுதியில் இயேசுவை மறுதலித்து விட்டான். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் என்மேல் அன்பு செலுத்த முடியுமா என்று கேட்ட போது அவன் சொல்கிறான், ஆண்டவரே என்னால் முடியாது, நான் சகோதரத்துவமாய் உம்மை நேசிக்கி றேன் என்று தான் சொல்கிறான். **இயேசு எதிர்பார்க்கிற அன்பு அகாப்பே அன்பு.**

**அன்புக்கு வடிவம் உண்மையாக இயேசு கிறிஸ்து மாத்திரமே.** ஏனென் றால் நாம் பாவிகளாய் இருக்கையில் எதையும் எம்மிடம் எதிர்பார்க்காமல் சிலுவையில் நமக்காக அவர் மரித்தார். ஆகவே வாழ்க்கையில் ஒருவேளை அன்பு குறையும் போது, சகோதரத்து வமான அன்பு இல்லாமல் போகும் போது நாம் கல்வாரி அன்பினிடத்தில் கடந்து வரவேண்டும். அவர் நமக்காய் கல்வாரி யில் மரித்தார். அவர் சரீரத்தில் மாத்திர மல்ல, ஆத்துமத்திலும் வியாகுலம் கொண்டார் என்று வேதம் சொல்கிறது. இவையெல்லாம் அவர் நம்மீது அன்பு செலுத்தினதினால் வந்தது. **யோவான் 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந் தார்.** ஆகவே **கிறிஸ்துவைக் கவனித்துப்** பாருங்கள் என்று வேதம் சொல்கிறது.

நாம் யார்? என்று நம்மை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் என்றால் கிறிஸ்துவைக் கவனித்துப் பார்க்க வேண்டும். பார்க்கிறோம் என்று சொல்வது வேறு; பார்க்கிறேன் என்றால் நான் பொதுவாக எல்லோரையும் பார்க்கிறேன். உதாரணமாக யாராவது இரண்டு பேர் கதைத்துக் கொண்டிருந்தால் நான் அவர்களை உற்று கவனிக்கிறேன். நம்மு டைய வாழ்க்கையில் நாம் கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரே நபர் இயேசு கிறிஸ்துவே.

## நாம் யார் என்பதை நிதானித்து நடக்க வேண்டும்

### 01. இயேசு நன்மை செய்தது போல நாமும் நன்மை செய்ய வேண்டும்

**அப்போஸ்தலர் 10:38 நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.** நாம் இயேசு கிறிஸ்துவிடம் கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரு காரியம் **"அவர் நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார்"** இயேசு சொல்கிறார்: உங்களைச் சபிக்கிறவர்களைக் கூட ஆசீர்வதிக்க வேண்டும். இயேசுவைக் குத்தினார்கள், சிலுவையில் அடித்தார்கள் ஆனால் இயேசு சொன்னார்: பிதாவே இவர்களை மன்னியும் என்று. அவரைக் குட்டினவர்களை பயமுறுத்தாமல்.. என்று வேதம் சொல்கிறது. அதாவது நான் மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்து, உங்களை பழிவாங்குவேன் என்று சொல்லவில்லை. இயேசு எப்படி வாழ்ந்தார் என்று கவனித்துப் பார்க்க வேண்டும். ஆகவே தேவனை அறிந்தவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான். இன்றைக்கு நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்துவை அறிய ஆரம்பித்துவிட்டால் நாம் அவரால் அறியப்படுகிறோம்.

### 02. அவர் வெளிப்பட்ட வார்த்தையாக இருக்கிறது போல நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை வெளிப்பட வேண்டும்

இயேசு தம்மை வெளிப்படுத்தினார். **யோவான் 1:1 ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.** கிறிஸ்து தேவனோடு இருந்தார் என்ற வார்த்தைப் பதம் கிரேக்க பாஷையில் 'லோகோஸ்' என்று சொல்லப்படும். லோகோஸ் என்றால் கொடுக்கப்பட்ட வார்த்தை. கிரேக்கர்கள் இதை எப்படி பயன்படுத்துவார்கள் என்றால் ஒருவர் ஒருவரோடு உரையாடும் போது பயன் படுத்திய வார்த்தைகள் லோகோஸ் என்று சொல்வார்கள். தேவன் நம்மோடு கூட உறவாடும் போது கொடுத்திருக்கிற வார்த்தை கிறிஸ்து யார் என்பதை நமக்கு வெளிப்படுத்துகிறார். அந்த வார்த்தை மாம்சமாகி மனுஷர்கள் மத்தியில் வாசம் செய்தது. தேவன் தன்னுடைய வார்த்தையை கொடுத்தது மாத்திரமல்ல, வெளிப்படுத்தின வார்த்தையாகவும் இறங்கி வந்தார். இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை. இன்றைக்கு ஆண்டவரே வெளிப்பாட்டை கொடும் என்று கேட்கிறோம். **கொடுக்கப்பட்டிருக்கிற பெரிய வெளிப்பாடு தேவனுடைய வார்த்தை.** அதற்காக வெளிப்பாடுகள் இல்லை என்று இல்லை. வெளிப்பாடுகள் இருக்கி

றது ஆனால் கொடுக்கப்பட்ட மிக முக்கிய மான வெளிப்பாடு கிறிஸ்து.

**பிலிப்பியர் 2:6-7 (6.) அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், 7. தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.** நாம் கர்த்தருடைய வார்த்தையில் வளரவேண்டும். அப்போஸ்தலர் 17ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம் தெசலோனிக்கேய சபை மிகவும் நல்லவர்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையை வாசிக்கிறவர்கள். ஆனால் பவுல் எழுதும் போது சொல்கிறார்: தெசலோனிக்கேய சபையைப் பார்க்கிலும் பெரேயா சபை அதிக குணசாலிகளாய் இருந்தார்கள். காரணம் அவர்கள் அனுதினமும் தேவனுடைய வார்த்தையை வாசித்து தியானம் செய்கிறவர்களாக இருந்தார்கள். இன்றைக்கு கிறிஸ்துவில் இருக்கிற நிலையில் உறுதிப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையில் பட்சமாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. **தேவனுடைய வார்த்தையில்லாமல் நீங்கள் ஒரு போதும் தேவனைக் கண்டு கொள்ள முடியாது.** தேவன் எங்களுடைய கரங்களில் கொடுத்திருக்கிற பெரிய பொக்கிஷம். 100 வருடங்களுக்கு முன் இருந்த நாட்களிலும் பார்க்க இன்றைய நாட்களில் அதிகமான தொழில்நுட்பங் கள் எல்லாம் வளர்ச்சியடைந்து அதற்குள் மக்கள் சிக்கியிருப்பதைப் பார்க்கிறோம். *Network* என்ற சிலந்தி வலைக்குள் மாட்டிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதன் மத்தியிலும் தேவனுடைய வார்த்தையை பிடித்து, சுடரொளி பட்டயமாகிய வார்த்தையில் உறுதிப்படாமல் போனால் நம்முடைய நிலை பரிதாபமாக மாறிவிடும்.

## 03. சரியான நேரத்தில் சரியான காரியத்தை செய்வது கிறிஸ்துவின் காரியம்; நாம் அதைப் போலச் செய்ய வேண்டும்

**யோவான் 2:1-4 (1.) மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள். 2. இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். 3. திராட்சரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். 4. அதற்கு இயேசு; ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். யோவான் 7:6-8 (6.) இயேசு அவர்களை நோக்கி: என்வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது. 7. உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது. 8. நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை என்றார். யோவான் 7:30 அப்பொழுது அவரைப் பிடிக்கவகைதேடினார்கள்;' ஆனாலும் அவருடையவேளை இன்னும்வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.**

**நல்லவேளை, சுபவேளை என்றெல்லாம் இல்லை. தேவனுடைய நேரமாக இருந்தால் அது போதும் நமக்கு.** தேவனுடைய நேரம் வந்த போது அவர் செயற்பட ஆரம்பித்துவிட்டார். அநேக நேரம், தேவனுடைய நேரத்தைப்

பார்ப்பதிலும் அவசரப்படுவதால் பிரச்சினை வந்துவிடுகிறது. இதற்கு வேதத்தில் இருந்து நல்ல உதாரணம் மோசே. பார்வோனின் கட்டளையால் அனைத்து ஆண் பிள்ளைகளும் மரித்த போதும் கூட மோசே காப்பாற்றப்பட்டதை குறித்து வாசிக்கிறோம். மக்களை விடுதலையாக்க வேண்டிய நேரத்தில் மோசேயை பயன் படுத்த ஆரம்பித்துவிட்டனர். ஆனால் அவனுக்குத் தெரியும் தேவன் தன்னைப் பயன்படுத்துவார் என்பது. ஒரு நாள் மோசே எகிப்தை சுற்றிப்பார்த்துவிட்டு வரும் போது ஒரு இஸ்ரவேலனை எகிப்தியன் அடிக்கிற போது அதைக் கண்டு அந்த எகிப்தியனைக் கொன்று புதைத்துவிட்டான். அடுத்த நாள் அவன் வருகிற போது இரண்டு இஸ்ரவேலர் சண்டை பிடிக்கிறார்கள். அதைக் கண்டு அவர்களை விலக்கிவிட்டு நீங்கள் சகோதரர்களாக இருக்கிறீர்கள், நீங்கள் சண்டைபோடக்கூடாது என்றான். அதில் ஒருவன் கேட்டான். உன்னை எங்களுக்கு நியாயாதிபதியாக மாற்றியது யார்? நேற்றைய தினம் எகிப்தியனைக் கொன்றது போல என்னையும் கொன்று போட வேண்டும் என்று பார்க்கிறாயா? என்று கேட்ட போது இந்தக் காரியம் வெளிப்பட்டுவிட்டது என்று எகிப்திலி ருந்து ஓடிப்போனான். அவன் ஓடிப் போனாலும் கர்த்தர் அவனைப் பயன் படுத்தினார் தான் ஆனால் அவனுடைய நேரத்திற்கு முன்பதாக செயற்பட ஆரம் பித்தான். அதினிமித்தம் அவனுடைய வாழ்க்கையில் ஒரு பாதிப்பு வர ஆரம் பித்துவிட்டது. **நேரம் என்பது முக்கியம். எந்த நேரத்தில் நாம் எதை செய்ய வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.**

சரியான நேரத்தில் சரியான காரி யத்தை செய்ய தெரிந்திருக்க வேண்டும். பிழையான நேரத்தில் சரியானதையும்; சரியான நேரத்தில் பிழையானதையும் செய்தால் அது பிரச்சினையாய் மாறி விடும். ஆகவே தேவனுடைய ஆவியான வரின் நடத்துதல் தேவை. கிறிஸ்து தேவனுடைய ஆவியால் நடத்தப்பட்டார். தாய் வந்து சொன்ன போது கூட அவர் சொல்கிறார்; **என்னுடைய வேளை இன்னும் வரவில்லை** என்று.

## 04. சரியான நபர்களோடு எங்களுடைய நேரங்களை செலவழிக்க வேண்டும். சீஷர்கள், நிக்கதேமு, சமாரிய பெண் போன்ற நபர்களோடு தன்னுடைய நேரத்தை செலவழித்தார். பலன் கொடுக்கிறவர்களோடு கிரியை செய்தார், நேரத்தை செலவு செய்தார். இன்றைக்கு நாம் எப்படியெல்லாம் நேரத்தைச் செலவிடுகிறோம்?

யோவான் 3, 4ஆம் அதிகாரங் களை வாசித்தால் 3ஆம் அதிகாரத்தில் நிக்கதேமு என்ற ஒரு பரிசேயன் இரவு நேரத்தில் இயேசுவிடம் வந்து இயேசு வோடு சில காரியங்களை பேசுகிறான். இங்குதான் மறுபடியும் பிறக்கிறது என்றால் என்ன என்ற முக்கியமான சத்தியம் சொல்லப்படுகிறது. 4ஆம் அதிகாரத்தில் சமாரிய ஸ்திரீ பகலில் வெப்பமான நேரத்தில் கிணற்றண்டை போகிறார். இப்போது சொல்வார்கள் வெளியே செல்லாதீர்கள், வெப்பத்தி னால் உச்சந்தலை பிளந்துவிடும் என்று. ஆனால் இயேசு ஒரே ஒரு ஸ்திரீக்காக போகிறார். அவளுடைய வாழ்க்கை ஒரு துக்கமான வாழ்க்கை. இயேசு அவளுக் காக கடந்து செல்கிறார். இயேசுவுக்கு

எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று தெரிந்திருந்தது மாத்திரமல்ல எந்த நபர்களோடு எதைப் பேச வேண்டும், எதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும். **யோவான் 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்.** பாவியான சமாரிய ஸ்திரீக்கு இயேசு சொல்கிறார். நம்முடைய வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நாம் எப்படி, எதனிடத்தில் நம்முடைய நேரத்தைச் செலவழிக்கிறோம்?

வாழ்க்கை என்பது குறிப்பிட்ட காலம் மாத்திரமே. அது ஏறத்தாள 70 அல்லது 80 வருடங்கள். பெலன் இருந்தால் 100 வருடங்கள். 121வருடங்கள் வரை மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தக் காலகட்டத்தில் நாம் எதைச் செய்து கொண்டிருக்கிறோம்? அதற்கெல்லாம் நாம் கணக்கு கொடுக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது. இயேசுவுக்கு பூமியில் ஊழியத்திற்காக மூன்றரை வருடங்கள் மட்டும் தான் கொடுக்கப் பட்டது. பகல் வேளை உள்ள போது கிரியை செய்யவேண்டும். ஏனென்றால் ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. இயேசுவுக்கு நேரம் தெரியும், காலம் தெரியும், யாரிடத்தில் தன்னுடைய நேரத்தைச் செலவிட வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும். நீங்கள் யாரிடத்தில் நேரத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இயேசு 12 சீஷர்களைத் தெரிந்து கொண்டு அவர்களோடு மாத்திரம் சம்பாஷித்தார். அவர்களிடம் தன்னுடைய காரியத்தை பகிர்ந்து கொண்டார். நிக்கதேமு, சமாரியப்பெண் போன்ற சிலரோடு பேசினார். அவருடைய வாழ்க்கை மூலம் அனேகர் தொடப்பட்டார்கள். இன்றைக்கு நீங்கள் யார் என்று கவனித்துப் பார்க்க வேண்டும் என்றால் உங்களுடைய வாழ்க்கை உறுதிப்பட வேண்டும் என்று சொன்னால் நீங்கள் பார்க்க வேண்டிய ஒரே நபர் கிறிஸ்து மாத்திரமே.

**யோவான் 7:14-18 (14.) பாதிப் பண்டிகையானபோது, இயேசு தேவாலயத்துக்குப்போய், உபதேசம் பண்ணினார். 15. அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள். 16. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. 17. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான். 18. சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.** யோவான் 17ஆம் அதிகாரத்தில் இயேசு முதலாவது தனக்காக ஜெபிக்கிறார். **யோவான் 17:1-4** வசனங்களில் இயேசு பிதாவை மகிமைப்படுத்துகிறார். யோவான் 17ஆம் அதிகாரத்தில் மூன்று ஜெபங்களைச் செய்கிறார். அதில் முதலாவது தனக்காக ஜெபிக்கிறார், அதில் தான் சொல்கிறார் பிதாவே நான் உம்மை மகிமைப்படுத்துகிறேன், தொடர்ச்சியாக உம்மை மகிமைப்படுத்துவேன் என்றும் பிறபாடு சீஷர்களைக் காப்பாற்றும், அவர்களும் உம்மை மகிமைப்படுத்த வேண்டும் என்பதோடு தொடர்ச்சியாக சொல்கிறார்: இவர்களைப் பார்த்து இரட்சிக்கப்படுகிற அனைத்து மக்களுக்காகவும் ஜெபம் செய்கிறார்.

எனக்காகவும் உங்களுக்காகவும் அன்றைக்கே இயேசு ஜெபித்தர். இயேசு அவருடைய சரீரமாகிய சபையின் மூலம் பிதாவை மகிமைப்படுத்துகிறார்.

## 05. இயேசு ஜெபித்தது போல ஜெபிக்க வேண்டும்

இயேசுவைக் கைது செய்து கொண்டு வரும்படி கூறிய போது போர்ச்சேவகர்கள் அவரைப் பிடிக்காமல் வந்து சொல்கிறார்கள், இவர் பேசியது போன்று ஒருவரும் பேசவில்லை என்று. **யோவான் 7:53 பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.** **இயேசு ஜெபிப்பதற்கு ஒலிவமலைக்குச் சென்றார். இயேசுவோ ஜெபிக்கிறவராக இருந்தார். நீங்கள் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று இயேசு சொன்னார்.** இன்றைக்கு ஜெபம் எப்படியிருக்கிறது? எங்களுடைய ஜெபத்தில் மேன்மை, வித்தியாசம் இருக்க வேண்டும். **ஜெபிக்கிறவர்களைக் கண்டால் தான் பிசாசு நடுங்கும். ஜெபிக்காதவனைக் கண்டால் பிசாசு அவனைப் பிடித்துக் கொள்வான்.** சபையில் தேவனுடைய நாமத்தை அசுத்தப்படுத்துகிறவர்களை பிசாசுக்கு ஒப்புக் கொடுங்கள் என்று பவுல் சொல்கிறார். நாமெல்லாம் யாரையெல்லாம் பிசாசின் கையில் இருந்து விடுதலையாக்குவது என்று பார்க்கிறோம். ஆனால் பவுல் எழுதுகிறார் இவர்களை சாத்தானின் கரங்களில் ஒப்புக் கொடுங்கள். சிலருக்கு தேவனோடு இருக்கும் வரை தெரியாது, தேவனைவிட்டு தூரமாய் சென்ற பிற்பாடு தான் அவர்களுக்குத் தெரியும். தேவன் என்றால் யார்? என்பது. சிலர் ஜெபத்திற்கு, ஆலயத்திற்கு, ஜெபக்கூட்டங்களுக்கு வருவதில்லை. தேவனை நிராகரிக்கிறார்கள். தேவன் சொல்கிறார்: என்னை கனப்படுத்துகிறவனைத் தான் நான் கனப்படுத்துவேன். என்னை அசட்டைபண்ணுகிறவனை நான் கனவீனப்படுத்துவேன் என்று.

**மத்தேயு 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.** ஆனால் நாம் சொல்கிறோம், ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் கொடும், அப்பொழுது நான் உம்மைத் தேடுவேன் என்று. முக்கியமாக **நீங்கள் தேடவேண்டியது தேவனுடைய ராச்சியம், தேவனுடைய நீதி.** என்னத்தை உண்போம், எந்த கைத்தொலைபேசியை வைத்திருப்போம் என்று கவலைப்படுகிறோம். **ஆனால் முதலாவது தேடுங்கள் என்று சொல்லப்படுகிற வார்த்தை என்னவென்றால் நீங்கள் தேவனை ஆராதிக்க வேண்டும். தேவனிடத்தில் எல்லாவற்றிற்காகவும் காத்திருக்க வேண்டும்.** இன்றைக்கு நம்முடைய எல்லா நேரத்திலும் அப்படியிருக்கிறோமா? எதைச் செய்தாலும் ஜெபம், எதைச் செய்தாலும் தேவனுடைய சித்தம் என்பதை தேடுகிறோமா? அதாவது கண்டுபிடிக்கும் வரையில் தேடவேண்டும். தேவனுக்கு இது முழுவதும் சித்தமா என்று அறியும் வரை தேடவேண்டும். அது தான் தேடுங்கள் என்ற வார்த்தையின் அர்த்தம். அப்பொழுது தான் இவைகள் எல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்.

## 06. இயேசு இரக்கமாய் இருந்தார்

**யோவான் 8:2-12** பகுதியில் இயேசுவிடம் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை கொண்டு வந்து நிறுத்திவிட்டு சொல்கிறார்கள்; மோசேயின் நியாயப்பிரமாணத்தில்

சொல்லப்படுகிறது இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று. நீர் என்ன சொல்கிறீர் என்று கேட்கிறார்கள். அப்போது இயேசு, கல்லெறிய வேண்டாம் என்றாலும் பிரச்சினை; கல்லெறியுங்கள் என்றாலும் பிரச்சினை என்பதைப் புரிந்து கொண்டார். ஏனென்றால் கல்லெறியுங்கள் என்றால் இயேசு கொடூரமானவர் என்று கூறிவிடுவார்கள். கல்லெறியக்கூடாது என்றால் இயேசு நியாயப்பிரமாணத்தை மீறுகிறார் என்பார்கள். இயேசுவிடம் நேரடியாக ஆம் என்றோ அல்லது இல்லை என்றோ சொல்ல முடியாத கேள்விகளைக் கொண்டு வருவார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து 'உங்களில் குற்றமில்லாதவன் முதலாவது கல்லெறியட்டும்' பிற்பாடு மற்றவர்கள் எறியலாம் என்றார். அந்த இடத்தில் குற்றமில்லாதவர் என்றால் இயேசு கிறிஸ்து மாத்திரம் தான். இதைக் கேட்டவர்கள் மனச்சாட்சியில் குத்துண்டவர்காய் அங்கிருந்து அகன்றார்கள். அப்போது இயேசு அந்த ஸ்திரீயைப் பார்த்து "நீ போ இனி பாவம் செய்யாதே" என்று சொல்கிறார். இயேசுவிடம் இருந்த கிருபை, இரக்கம், அன்பு போன்றவற்றை கவனித்துப் பார்க்க வேண்டும். இயேசு பேசிய வார்த்தை அவர்கள் மனச்சாட்சியைக் குத்தியது. அதே போன்று அப்போஸ்தலனாகிய பேதுரு முன்பு இயேசுவை மறுதலித்தான். ஆனால் பின்னர் உம்மை நேசிக்கிறேன் ஆனால் அகாப்பே அன்பை என்னால் கொடுக்க முடியாது என்று சொன்னவன் என்னிடத்தில் உள்ளதை தருகிறேன் "இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று முடவனைப் பார்த்து சொன்ன போது முடவன் குதித்து எழுந்து நடந்தான் என்று வேதம் சொல்கிறது. **11கொரிந்தியர் 4:8-11 (8.) நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்க மடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; 9. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிற தில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிற தில்லை. 10. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். 11. எப்படியெனில், சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்.**

இந்தக் காரியங்கள் உங்கள் வாழ்க்கையில் இல்லையென்றால் தேவனுடைய பாதத்தில் அமர்ந்திருந்து ஜெபியுங்கள். ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான், என் நாமத்தினால் எதைக் கேட்டாலும் அதைச் செய்வேன் என்று இயேசு சொல்லியிருக்கிறார். வேதம் சொல்கிறது, நாம் எல்லோரும் ஒரு நாள் அவரைப் போன்று மாறுவோம் என்று. நாம் கிறிஸ்துவைப் போல அவர் சாயலில் மாறுவோம் என்றால் அவர் எதையெல்லாம் செய்தாரோ அவையெல்லாம் நம் வாழ்வில் உறுதிப்பட வேண்டும்.

**"தேவன் தாமே
உங்களை நிறைவாக
ஆசீர்வதிப்பாராக"**






# கர்த்தர் பார்க்கின்றார்

## வேதப்பகுதி: சங்கீதம் 139:1–12

திவ்யனுக்கு தான் விரும்பிய ஐஸ்கிரீமை வாங்க 20ரூபாய் தேவைப்பட்டது. அப்பாவின் சட்டைப் பையிலிருந்து நைசாக 20ரூபாய் எடுக்க விரும்பினான். ஆனால் யாரும் பார்த்துவிடக்கூடாது என்று எச்சரிக்கையாயிருந்தான். அப்பா, அம்மா, தம்பி யாருமே அங்கே இல்லை. இதுதான் சரியான வேளை என நினைத்தான். ஆனால் எதிர்பாராத விதமாக சுவரில் மாட்டப்பட்ட வசனப்பலகை கண்ணில்பட்டது. "நீர் என்னை காண்கிற தேவன்" என்று அதில் எழுதியிருந்தது. கர்த்தர் தன்னை பார்க்கின்றார் என்ற உணர்வு அவனுக்கு வந்தது. 20ரூபாய் திருடும் திட்டத்தை கைவிட்டுவிட்டான்.



நாம் செய்ய விரும்பும் தவறுகளை யாருமே பார்க்க முடியாமல் இருக்க முடியும். ஆனால் கர்த்தர் அங்கே பார்க்கின்றார். அவருக்கு தெரியாமல் நாம் எதையும் எடுக்க முடியாது. எனவே தேவனுக்குப் பயந்து நாம் தவறுகளை செய்யாமல் விலக வேண்டும். தாவீது அவ்விதமாகவே கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்தான்.

**சிந்தனைக்கு:–** மனிதர்கள் பார்க்காத வேளைகளிலும் கர்த்தர் நம்மைப் பார்க்கின்றார். எனவே நாம் எச்சரிக்கையாயிருப்போம்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — மே 12

# குறுக்கெழுத்துப் போட்டி - 91, வினா விடை - 93

## சரியான விடை எழுதியவர்கள்

**காரைநகர்**
01. பா.டிலானி
02. பா.கோமதி
03. லோ.வதனி
04. அ.எஸ்தர்
05. உ.சாத்ராக்
06. அ.தெபோரா
07. அ.கிருசாந்தன்
08. நா.கிறிஸ்தீனா

**பாண்டவெட்டை**
09. மு.ஜெசிந்தா
10. சி.சிவனேஸ்வரன்
11. சி.சுமித்திரா
12. எஸ்.டுமாலினி *
13. ம.சிவகௌரி
14. ம.நிம்சிகா

**பள்ளிக்குடா**
15. க.கிறேஸ் கெற்சியாள்

**நாவற்குழி**
16. ஆ.ஜெசீபா *
17. A.மேரி

**புங்குடுதீவு**
18. ஜெ.ஜரன்யா

**வேரவில்**
19. அ.அபிசாயினி

**கனடா**
20. குகன் குடும்பம் +

**திருநெல்வேலி**
21. என்.செல்வன்



* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

2019

## சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:

**வினாவிடை - 93**
ஆ.ஜெசீபா
நாவற்குழி



**குறுக்கெழுத்துப் போட்டி - 91**
ஜெ.ஜரன்ஜா
புங்குடுதீவு

*மழைக் காலங்களில் எல்லாப்*
*பறவைகளும் கூடுகளில்*
*அடையும்; ஆனால் கழுகு*
*மழையைத் தவிர்க்க மேகத்துக்கு*
*மேலாகப் பறக்கும்.*





# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணததுடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

## Subscription (Per Year S.L. Rs)

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

| | |
|---|---|
| இலங்கை **(Sri Lanka)** | **245.00** |
| இந்தியா **(India)** | **490.00** |
| கனடா, அமெரிக்கா **(Canada & USA)** | **1015.00** |
| சிங்கப்பூர், மலேசியா **(Singapore & Malaysia)** | **525.00** |
| மத்திய கிழக்கு நாடுகள் **(Middle East Countries)** | **510.00** |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா **(Germany, England, Italy & Australia)** | **850.00** |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..............................................................................................

முகவரி:............................................................................................

.........................................................................................................

.........................................................................................................


தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை
விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல்
நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி,
இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.
யோவான் 3:16
To:
Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.
அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351